PR No: 92 நாள் : 23.08.2017

# பத்திரிக்கை செய்தி

❖❖❖❖❖

திருநெல்வேலி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் அறிவுரையின் படி சேரன்மகாதேவி கோட்டத்தில் சேரன்மகாதேவி சார்ஆட்சியர் தலைமையில் காவல் துறை உயர் அலுவலர்கள், வருவாய் துறை அலுவலர்கள், மற்றும் சிலை பாதுகாப்பு குழுவினர் ஆகியோர்களுடன் 23.8.2017 அன்று நடைபெற்ற விநாயகர் சதுர்த்தி விழா தொடர்பான முன்னோடி கூட்டத்தில் கீழ்கண்ட அறிவுரைகளை கடைபிடிக்க உத்தரவிடப்பட்டது.

- விநாயகர் சிலைகளை வைப்பதற்கு காவல்துறை அனுமதி கண்டிப்பாக பெற வேண்டும்
- கடந்த வருடந்தில் அனுமதிக்கப்பட்ட இடங்களில் மட்டுமே விநாயகர் சிலைகளை வைக்க வேண்டும் புதிதாகவோ, கூடுதலாகவோ விநாயகர் சிலைகளை வைக்க அனுமதி இல்லை.
- திருநெல்வேலி மாவட்டத்தில் இந்த ஆண்டு 01.09.2017 அன்று விடுதலை போராட்ட வீரர் மாமன்னர் புலித்தேவன் பிறந்தநாள் விழா மற்றும் 03.09.2017 அன்று பக்ரீத் பண்டிகை வருவதாலும் சட்டம் ஒழுங்கை கருத்தில் கொண்டு இந்த ஆண்டு மட்டும் விநாயகர் சிலை அமைத்து பூஜை செய்ய 30.8.2017-ம் தேதி வரை மட்டுமே அனுமதி வழங்கப்படும்
- இந்த ஆண்டு சட்டம் மற்றும் ஒழுங்கை கருத்தில் கொண்டு 30.8.17-ம் தேதிக்குள் அனைத்து சிலைகளும் கரைக்கப்பட வேண்டும்.
- பாரம்பரிய முறைப்படி களிமண் மூலமாகவே விநாயகர் சிலை செய்யபட்டிருக்க வேண்டும்.
- ஒவ்வொரு சிலைக்கும் குறைந்தது 20 பொறுப்பாளர்கள் அடங்கிய சிலை பாதுகாப்பு குழு 24 மணிநேரமும் தீவிர கண்காணிப்பில் இருத்தல் வேண்டும்.
- விநாயகர் சிலை அமைவிடத்தில் சிலை பாதுகாப்பு குழுவினரின் முழுவிபர அட்டவணை சிலை அருகில் தெளிவாக தொங்க விட வேண்டும்.
- அனைத்து விநாயகர் சிலை அமைவிடத்திலும் CCTV கேமரா பொருத்தப்பட வேண்டும்.

P.T.O.

- உச்சநீதிமன்ற தீர்ப்பின்படி பெட்டி வடிவ ஒலிப்பபெருக்கி மட்டுமே பயன்படுத்த வேண்டும், இரவு 10.00 மணியிலிருந்து காலை 6.00 மணி வரை எந்த வித ஒலிபெருக்கியும் பயன்படுத்தகூடாது.
- பழைய ஊர்வல பாதையில் மட்டுமே விநாயகர் சிலையினை கொண்டு செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளது புதிய ஊர்வலங்களுக்கு கண்டிப்பாக அனுமதி கிடையாது. குறித்த நேரத்தில் ஊர்வலம் நடத்தப்பட வேண்டும் காலதாமதமாக கொண்டு செல்ல அனுமதி மறுக்கப்படுகிறது.
- ஊர்வலத்தின் போது பிற மதங்களின் உணர்வுகளை புண்படுத்தும் விதமாகவோ, கோஷங்கள் எழுப்ப கூடாது மதரீதியான பிரச்சனைகள் எழக்கூடிய இடங்களில் ஊர்வலங்கள் செல்லக்கூடாது.
- ஊர்வல வாகனத்தில் ஒலிபெருக்கி பயன்படுத்த அனுமதி மறுக்கப்படுகிறது மற்றும் வானவேடிக்கையாக பட்டாசுகள் வெடிக்க கூடாது.
- ஊர்வல பாதையில் கைவிடப்பட்ட சிலை எதேனும் இருப்பின் சம்பந்தப்பட்ட நபர்களுடன் ஆலோசித்து உடனடியாக மாற்று ஏற்பாடுகள் செய்து அப்புறப்படுத்தப்படும்.
- விநாயகர் சிலை ஊர்வலத்தின் போது ஜாதி சம்பந்தப்பட்ட ரிப்பன், பனியன் கொடி மற்றும் செண்டை மேளம் ஆகியவை பயன்படுத்தகூடாது.
- ஒவ்வொரு நாள்ஊர்வலமும் காலை 6.00 மணிக்கு தொடங்கி மாலை 6.00 மணிக்குள் சிலை கரைப்பு செய்து முடிக்கப்பட வேண்டும்
- காவல் துறை அனுமதியின்றி பொதுகூட்டம் நடத்தக்கூடாது

மேலே உள்ள நிபந்தனைகள் மற்றும் நடைமுறையில் உள்ள விதிமுறைகள் மீறும்பட்சத்தில் அவர்கள் மீதும் மற்றும் பொறுப்பாளர்கள் மீதும் காவல்துறையினரால் சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும்.

சார் ஆட்சியர்
சேரன்மகாதேவி

வெளியீடு
செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்,
திருநெல்வேலி